★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✱ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: ஐப்பசி 2௨ வியாழன் (18—10—56) ★ ★ வெளியூர்: ஐப்பசி 3௨ வெள்ளி (19—10—56) [இதழ் 111

கதர்—அவமானச் சின்னம்!

★

திருப்பூர், அக் 17—

"கதர் ஒரு காலத்தில் பெருமைக்குரிய சின்னமாகக் கருதப்பட்டது; இப்போது, அது ஒரு அவமானச் சின்னமாகி யிருக்கிறது" என்று, ஆச்சாரியா வினோபா பாவே இங்கு ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

'பேசுவது ஜனநாயகம் -- நடைமுறையோ சர்வாதிகாரம்'

'காங்கிரஸ் ஆட்சிப் பொறுப்பில் நீடிப்பது ஆபத்தானது — கேடு பயப்பது'

'ஆட்சியில் இருப்பவர்கள் பொறுப்புணர்ந்தவர்களாயில்லை'

நாகபுரியில் டாக்டர் அம்பேத்கார் முழக்கம்

"காங்கிரஸ் தொடர்ந்து ஆட்சியிலிருக்குமானல், அதன் ஏதேச்சாதிகாரப் போக்கு தடுத்து நிறுத்தப்படாவிட்டால் நாடு அழிந்துபடும்"

—என்று, டாக்டர் அம்பேத்கார் நாகபுரி நகரசபை தமக்கு அளித்த வரவேற்புக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"இப்போது இந்தியாவில் நிலவும் கட்சி ஆட்சி முறை, ஜனநாயகம் வெற்றி பெறும் போக்கில் இல்லை; தனி மனித 'பூஜா உணர்ச்சி'யின் அடிப்படையில்தான் காங்கிரஸ் இன்று நடத்தப்பட்டு வருகிறது. சர்வாதிகார நோக்கமுடையதாகக் காங்கிரஸ் இன்று இருந்துவருகிறது.

"'*காங்கிரஸ் மத்திய பார்லிமெண்டரி போர்டு'தான் மக்கள் சபைக்கும், மாநில சட்டசபைகளுக்கும் அபேட்சகர்களைப் பொறுக்கி எடுக்கிறது; தலமக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பின்றியுள்ளனர்; இந்த முறை, கட்சி சர்வாதிகாரத்தைக் கொண்டுவந்துவிட்டது.*

"பம்பாய் மாநிலத்திற்குத் தன்னைத் தேர்ந்தெடுக்க வேண்டுமானல், தனக்குப் போட்டியே இருத்தலாகாது—தான் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும் என்றும், மந்திரிகளைப் பொறுக்குவதற்குத் தனக்கு முழு உரிமையும் இருக்கவேண்டும் என்றும் மொரார்ஜி தேசாய் கூறியிருக்கிறார். இப்படி இந்தியாவில் மட்டும்தான் ஒருவர் கூறமுடியும்; இது, சர்வாதிகாரம் என்பதைத் தவிர வேறென்ன?

"இந்தியாவுக்கென ஒரு அரசியல் சட்டம் இருக்கிறது; ஆனல் அதனை அமுல் செய்பவர்கள் தங்கள் பொறுப்புகளை உணர்ந்தவர்களாயில்லை. மக்களுக்கும் தங்கள் உரிமைகள் பற்றிக் கவலை இல்லை. இந்தச் சூழ்நிலைகளில், ஜனநாயகம் தோற்றுப் போகிற அபாயமும் ஒரு சிலரது ஆட்சியும் ஏற்படுகிற அபாயமுமிருக்கிறது,"

என்றும் டாக்டர் அம்பேத்கார் எச்சரித்துள்ளார்

இதற்கு என்ன காரணமோ?

துணி கையிருப்பு தடையுத்தரவு: டில்லி திரும்பப் பெற்றது

புதுடில்லி, அக் 17—

துணி விலை உயர்வைத் தடுக்கவும், பதுக்கலை ஒழிக்கவும், மக்கள் நலனை முன்னிட்டு சென்ற திங்கள் 24-ம் நாள் துணிக் கையிருப்பு தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இந்த உத்தரவுப்படி மொத்தத் துணி வியாபாரிகள் தம்முடைய மூன்று மாதத் தேவைக்குமேல் துணிகளைக் கையிருப்பில் வைத்துக்கொள்ளக்கூடாது.

இப்போது மத்திய அரசாங்கம், இந்த உத்தரவு அவசியமில்லையென்று கருதித் தடையைத் திரும்பப் பெற்றுக்கொண்டு விட்டது.

அவசியமானபோது, அவசியமான இடங்களில் மாநில அரசாங்கமே இத்தகைய தடை உத்தரவை பிறப்பிப்பதற்கு அதிகாரம் தரப்பட்டுள்ளது.

உரிமைக்குரல் எழுப்புவது சிறுபிள்ளைத்தனமானதாம்

'ஆசியஜோதி'யின் ஆவேசப் பேச்சு

கௌஹாத்தி, அக். 17—

பண்டித நேரு கௌஹாத்தி நகருக்கு வந்தபோது, 'அசாம் மாநிலத்தில் ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையைத் துவக்கவேண்டும்' என்று கோரி ஏராளமான மக்கள் கோஷம் எழுப்பியிருக்கிறார்கள்.

அவர்கள் கோரிக்கையைத் தட்டிகளில் எழுதி, பண்டித நேரு பவனிவந்த தெருவில் அணிவகுத்து நின்றுகொண்டு குரல் எழுப்பினர் என்று தெரிகிறது.

இதைக்கண்ட நேரு பண்டிதர் மாலையில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசும்போது, 'இதுபோல நடு வீதியில் நின்றுகொண்டு கோஷம் போடுவது, பிரச்சினையை ஆக்கபூர்வமான நோக்குடன் அணுகுவதாகாது; இப்படிக் குரல் எழுப்புவது, சிறுபிள்ளைத்தனமானது'

என்று ஆவேசத்தில் கூச்சலிட்டாராம்!

50,000 தொழிலாளர் வேலை நிறுத்தம்

டோக்கியோ, அக். 17—

சுமார் 50,000 ஜப்பானியக் கப்பல் தளத் தொழிலாளர்கள் கூலி உயர்வு கோரி நடத்திவரும் வேலை நிறுத்தத்தின் மூன்றுவது கட்டத்தை இன்று துவக்கியுள்ளனர் என்று தெரியவருகிறது.

பீகார் நகரில் துப்பாக்கிப் பிரயோகம்

5 பேர்பலி; பலருக்குக்காயம்

தம்கா (பீகார்), அக். 17—

தர்கா தேவியின் ஆறு சிலைகளை ஊர்வலமாக எடுத்துச் சென்றவர்கள் மசூதி ஒன்றின் அருகே செல்லும்போது வாணவேடிக்கைகள் நடத்தவும், வாத்தியங்கள் இசைக்கவும் முயன்றார்களாம்; இதை, 'கூடாது' எனச் சிலர் தடுத்தார்களாம்; அதன் விளைவு, ஊர்வலக்காரர்கள்மீது கூட்டம் ஒன்று பாய்ந்து தாக்கியதாம்.

'நிலைமை கட்டுக்கடங்கவில்லை' என்றுகூறி போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து மூன்று பேர்களின் உயிர்களைக் குடித்ததாகக் கூறப்படுகிறது.

இரு சாராருக்கும் ஏற்பட்ட மோதுதலின்போதும் இருவர் கொல்லப்பட்டனர் என்றும், பலர் காயம்பட்டனர் என்றும் கூறப்படுகிறது.

இனி தமிழிலேயே பேசுவாராம்!

சென்னை, அக். 18—

"இங்கே எனக்குமுன் பேசியவர்கள் ஆங்கிலத்தில் பேசினார்கள்; நான் தமிழிலேயே பேசுகிறேன்! ஏனெனில், இன்னும் இரு வாரங்களில் தமிழ் மாநிலம் ஏற்படப் போகிறது"

என்று அமைச்சர் மாணிக்கவேலர் கலியாணநகர் குடியிருப்போர் சங்கத்தில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் பேசுகையில் 'தமிழில் பேசினல்தான் பலருக்கு நன்றாகப் புரியும்; அதனல்தான் நான் இனி தமிழிலேயே பேசப் போகிறேன்' என்று கூறினாராம்.

கன்னியாகுமரி மாவட்டம்

சென்னை, அக். 17—

திரு-கொச்சியிலிருந்து தமிழ் நாட்டுடன் இணையும் பகுதிகளைக் 'கன்னியாகுமரி மாவட்ட'மாக உருவாக்குவது என்று ஏற்கனவே முடிவு செய்தபடி, மாவட்ட நிர்வாகத் தலைவர் அலுவலகம் திறக்கவும், ஜஜூ ஒன்று திறக்கவுமான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன என்று தெரியவருகிறது.

மாவட்டத் தலைநகர் நாகர்கோவிலில் அமையுமென்றும் நாகர்கோவிலில் இப்போது விசேட அதிகாரியாகப் பணிபுரிந்துவரும் ஆர் திருமலை ஐ. ஏ. எஸ். மாவட்ட அதிகாரியாகப் பதவி ஏற்பார் என்றும் கூறப்படுகிறது.

வீரர் சங்கரலிங்கனர் மறைவு

பொதுச்செயலாளர் அனுதாபச் செய்தி

தோழர்களே! எவ்வகையிலும் தமிழர்க்குப் பொருந்திவராத 'சென்னை' மாநிலம் என்ற பெயரைத் தமிழரின் வரலாற்றுக்கும்—நாகரிகத்திற்கும்—பெருமைக்கும்—மதிப்புக்கும்—உயர்வுக்கும்—சிறப்புக்கும்—உணர்ச்சிக்கும்—எழுச்சிக்கும் பொருந்திவரக்கூடிய 'தமிழ்நாடு' என்று மாற்றி அமைக்க வேண்டும் என்பதிலே மங்கா உணர்ச்சி கொண்டு, அதற்காக உண்ணுநோன்பு இருந்து உயிர் ஈந்த விருதை உத்தமர் தோழர் சங்கரலிங்கனர் அவர்களின் மறைவு கேட்டுத் திடுக்கிட்டுப் போனேன்! துக்கத்திலும் துயரத்திலும் ஆழ்ந்தேன்!

தமிழுணர்ச்சி அற்ற—தமிழ்ப் பண்பாடற்ற—தன்மானமற்ற சென்னை மாநில அரசியலாரின் ஆணவப்போக்கு தோழர் சங்கரலிங்கனர் அவர்களின் உயிரை வவ்விக் கொண்டுவிட்டது! சென்னை அரசியலார் குடிதழுவிக் கோலோச்சும் நீதி முறையைக் கடைப்பிடித்திருந்தால், தமிழகம் ஒரு சிறந்த உத்தமரை இப்பொழுது இழந்திருக்க வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டிருக்காது. தோழர் சங்கரலிங்கனரை இழந்த தமிழ் மக்கள் இன்று ஆற்ருது அழுத கண்ணீரைச் சிந்துகின்றனர். இவர்கள் ஆற்ருது அழுத கண்ணீர், ஆணவம்கொண்ட இன்றைய ஆட்சியைத் தேய்க்கும் படைக்கருவியாக மாறும்—நல்லாட்சியை நிறுவி, நலம் பயக்கச் செய்யும் என்பது மட்டும் உறுதி!

வீரர் சங்கரலிங்கனர் எந்தக் கொள்கை வெற்றிபெற வேண்டும் என்பதற்காக உயிர்விட்டாரோ, அந்தக் கொள்கையை வெற்றியுறச் செய்வதே, நாம் அவருக்குச் செய்யும் இறுதி வணக்கம்! சிறப்பு! பாராட்டு! எல்லாம் ஆகும்!

தமிழக மக்கள் அனைவரும் அந்த வகையில் இறுதி வணக்கம் செலுத்துவோமாக!

அவரை இழந்து வருந்தும் அவரது உற்றார், உறவினர், நண்பர், தமிழன்பர்கள் அனைவருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரா. நெடுஞ்செழியன்

பொதுச்செயலாளர், தி.மு.கழகம்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

21-10-56:

★

நாட்டுக்கு உயிர் ஈந்த உத்தமர்

சங்கரலிங்கனர் நாள்

பொதுச்செயலாளர் வேண்டுகோள்

சென்னை மாநிலத்திற்குத் தமிழ் நாடு என்று பெயர் வைப்பதில் தனிப் பெரும் ஆர்வம் கொண்டு அதற்கான முயற்சியில் தன் உயிரையே ஈந்த தமிழ் நாட்டின் உத்தமர் விருதுநகர் தோழர் சங்கரலிங்கனர் அவர்களுக்கு வீரவணக்கம் தெரிவிக்கவும், அவர் கண்ட கனவை நனவாக்கும் முயற்சியில் நாம் ஈடுபட உறுதி கொள்ளவும், 21—10—56 ஞாயிற்றுக்கிழமையை உத்தமர் சங்கரலிங்கனர் நாளாகக் கொள்ள வேண்டுகிறேன்.

அன்று, பொதுவாகத் தமிழ்ப் பெருங்குடி மக்கள்—குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள், ஊர்வலங்கள் நடத்துதல், பொதுக்கூட்டங்கள கூட்டுதல் ஆகிய பணிகளின் மூலம், சங்கரலிங்கனரின் உணர்ச்சியை அரசியலாருக்கு நினைவூட்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள் இப்பணியை [வாய்ப்புள்ள இடங்களில் பிற கட்சிகளின் கூட்டுறவைப் பெற்று] இனிது நிறைவேற்றி வைக்குமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

'அறிவகம்'
சென்னை-13
18-10-56

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 18-10-'56 வியாழன்

இணைப்பின் மதிப்பு

இந்தியத் துணைக் கண்டத்துடன் இணைந்து வாழ்வதினால் தென்னாட்டிற்குப் பலவகையிலும் இலாபமே அல்லாது காதொடிந்த ஊசியளவும் நட்டம் கிடையாது என வாதிட்டு வருகின்றனர் காங்கிரசுக் கட்சியினர் உள்ளிட்ட ஏக இந்தியா வாதிகள்.

இணைப்பினால் ஏற்படக் கூடிய இலாபத்திற்குத் தக்க எடுத்துக் காட்டுகளாக, உணவுப் பொருள் உதவுவதையும், ஆலைத் துணிகள் அளிப்பதையும், வேறு சில உதவிகளையும் சுட்டிக்காட்டி வருகின்றனர் அவர்கள். அதுவுமன்றி, இந்தியப் பேரரசின் கீழ் இணைந்து இருப்பதினால்தான், பிறநாட்டினர் படையெடுப்புப் பயமின்றி தென்னாட்டால் வாழ முடிகிறது எனக் கூறும் அளவிற்கும் அந்த ஏக இந்தியாவாதிகள் சென்று விடுகின்றனர்.

இந்தியப் பேரரசு செய்து வருவதாக இவர்களால் சுட்டிக் காட்டப்பெறும் இந்த உதவிகள், தென்னாடு தனிச் சுதந்திர நாடாக இருந்தாலும் கிடைத்துவரும் என்ற உண்மையை அவர்கள் காண மறுக்கிறார்கள். இந்தியப் பேரரசிடமிருந்து கிடைத்துவரும் உதவிகளைவிடக்கூடுதலான உதவிகளை இப்பொழுதைவிட குறைவான செலவிலும், முயற்சியிலும் தனிச்சுதந்திரத் தென்னாட்டால் பிற நாடுகளிடமிருந்து பெற முடியும் என்ற உண்மை, பற்றுதலினால் கூறப்படும் வெறும் கற்பனையல்ல. பிற நாடுகளிலிருந்து இந்தியப் பேரரசு பெற்றுவரும் உதவிகளே, மேற்குறிப்பிட்டுள்ள உண்மையை உறுதிப்படுத்தப் போதிய அத்தாட்சியாகும். அதாவது, இந்தியப் பேரரசிற்கு உதவிகள் அளித்துவரும் அதே வெளிநாடுகள், தனிச் சுதந்திர நாடாகத் தென்னாடு விளங்கினாலும் உதவி செய்ய முன்வருமேயல்லாது, உதவிசெய்ய முடியாது என ஒருக்காலும் கூறப்போவது கிடையாது.

இந்தியப் பேரரசால் செய்யப்பட்டு வருவதாகப் பெருமையாகக் குறிப்பிடப்படும் உதவிகள், தென்னாட்டின்மீது இந்தியப் பேரரசு கொண்டிருக்கிற விசேட இரக்கச் சிந்தையின் விளைவாகக் கிடைக்கும் தானம் அல்ல. வடிகட்டின வியாபார முறை என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அந்த வியாபாரமும் நேர்மையான, அதாவது விற்கிறவர்களும் வாங்குகிறவர்களும் தம் தம் இலாப நட்டங்களைச் சீர்தூக்கிப் பார்த்து, தம் தமக்குச் சாதகமான விலையை நிர்ணயித்துக் கொண்டு செய்யப்படும் வியாபாரமாகச் சொல்வதற்கில்லை. விற்கிறவன் நிலையில் உள்ள இந்தியப் பேரரசு விதிக்கிற விலைக்கு மறுப்புக் கூறாது உதவிப் பொருளைப் பெற்றுக் கொள்ள வேண்டியக் கட்டாயத்தில் தென்னாடு இருந்து வருகிறது. இந்தியப் பேரரசு குறிப்பிடுகிற விலை, தனக்கு நட்டம் விளைவிக்கக் கூடியதாக இருந்தாலும், அதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயம் தென்னாட்டிற்கு இருக்கிறது. எனவே, இதை ஒரு நியாயமான வியாபாரமுறை எனக்கூற எவரும் துணியமாட்டார்கள்.

மைசூர் ஆட்சிக்குட்பட்ட கோலார் தங்கச் சுரங்கங்களில் தங்கத்தைத் தோண்டி எடுத்து பல்லாண்டுக்காலமாகத் தொழில் நடத்திவந்தன ஆங்கில வெள்ளையர் நிறுவனங்கள். அந்தத் தொழிலைத் தானே எடுத்து நடத்த மைசூர் அரசாங்கம் முன்வந்தது.

தனது முடிவுப்படி தங்கச் சுரங்கத்தைத் தனதாக்கிக் கொள்ளும் சட்டமியற்றும் உரிமை இந்திய அரசியல் சட்டப்படி மைசூர் அரசாங்கத்திற்குக் கிடையாது; அதற்கான உரிமை கொண்டிருப்பது இந்தியப் பேரரசேயாகும்.

எனவே, இந்தியப் பேரரசின் உடன்பாட்டை, தேசியமயமாக்கும் கோட்பாட்டிற்கு முன்கூட்டியே பெற்றாக வேண்டிய கட்டாயம் மைசூர் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. அன்னாள் முதலமைச்சராக இருந்துவந்த அனுமந்தையா அவர்கள், சுரங்கத்தைத் தேசியமயமாக்குவதில் எடுத்துக் கொண்ட முயற்சி, காட்டி வந்த உறுதிப்பாடு, இந்தியப் பேரரசை வேண்டாவெறுப்பாக அக்கொள்கையை ஏற்கச் செய்தது. தங்கச் சுரங்கத்தைத் தேசிய மயமாக்குவதற்கு இந்தியப் பேரரசு உடன்பட மறுத்தால், தனது பதவியைவிட்டு வெளியேறிவிடப் போவதாகக்கூட அன்று முதலமைச்சராக இருந்த அவர் எச்சரித்தார். இதைக்கொண்டு, மைசூர் அரசாங்கத்தின் பிடிவாதம் கண்டு வேறு கதியற்ற நிலையில்தான் இந்தியப் பேரரசு முடிவாக இக்கருத்துக்கு இணங்கியது எனக்கூறுவதுகூட மிகைபடக் கூறியதாகாது.

தங்கச் சுரங்கத்தைத் தேசியமயமாக்குவதற்கு உடன்பட்ட போதிலும், நட்டஈடு தரும் விஷயத்தில் இந்தியப் பேரரசு முட்டுக்கட்டை போட முன் வந்தது. மைசூர் அரசாங்கம் நட்டஈட்டுத் தொகையாகத் தர நிர்ணயித்திருந்த 87.8 இலட்சம் ரூபாய் மிகக் குறைவான தொகை எனப் பேசத் தொடங்கியது. தொகையை நிர்ணயம் செய்ய ஒரு குழுவையும் நியமித்தது இந்தியப் பேரரசு.

இந்தியப் பேரரசால் நியமிக்கப்பட்ட கால் குழுவும், நட்டஈட்டுத் தொகையை 119 இலட்சம் ரூபாயாக நிர்ணயம் செய்தது. இதற்கு முழு விருப்பம் இன்றி மைசூர் அரசாங்கம் இணங்க வேண்டியதாயிற்று.

இந்தத் தொகை குறைவானது என தங்கச் சுரங்க வெள்ளைத் தொழில் நிறுவனங்கள் சீறிப் பாய்ந்தன. நாங்கள் இட்டுள்ள மூலதனத்தின் இன்றுள்ள மதிப்பே ரூ.170 இலட்சமாகிறதே எனக கூச்சலிட அவை தொடங்கின.

இறுதியாக நட்ட ஈட்டுத் தொகையை ரூ 164 இலட்சமாக இந்தியப் பேரரசு நிர்ணயித்துவிட்டது. இதைக் கொடுப்பதற்கு மைசூர் அரசாங்கம் விரும்பவில்லையானாலும், இந்தியப் பேரரசின் சொல்லுக்குக் கட்டுப்பட்டுத் தீரவேண்டிய கட்டாயத்தினால், முடிவாக ஒப்புக்கொண்டு விட்டது.

முதல் முதலாக மைசூர் அரசாங்கம் நிர்ணயித்த நட்ட ஈட்டுத் தொகையான ரூ. 87·8 இலட்சத்திற்கும், முடிவாக இந்தியப் பேரரசின் வற்புறுத்தலினால் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள ரூ. 164 இலட்சத்திற்கும் உள்ள வித்தியாசத் தொகையை, மைசூர் அரசாங்கத்திற்குக் கடனாகக் கொடுக்க இந்தியப் பேரரசு முன்வந்து இருக்கிறது.

தனது கருத்திற்கு மைசூர் அரசாங்கத்தை இணங்கச் செய்வதற்கு ஒரே ஒரு நியாயத்தை இந்தியப் பேரரசு பன்னிப்பன்னிக் கூறி இருக்கிறது. அதாவது, வெளிநாட்டு மூலதனங்களைத் தேசியமயமாக்குவதின் மூலம், இந்தியத் துணைக்கண்டத்தில் வெளிநாட்டார் மூலதனம் போடுவதற்கு முன்வர மாட்டார்கள் என்ற நியாயத்தை இந்தியப் பேரரசு வற்புறுத்தி இருக்கிறது. அதற்கு ஆதரவாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஏற்பாடுகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்படுவதற்கு வெளிநாட்டு மூலதனத்தின் அவசியத்தையும் சுட்டிக்காட்டி இருக்கிறது.

இந்தியப் பேரரசின் இந்த வாதத்தில் மறைந்து கிடக்கும் உண்மையை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். மேலோட்டமாக நோக்கினால், இந்தியப் பேரரசின் வாதத்தில் நியாயமிருப்பதாகத் தோன்றும். நுணுகி ஆராய்ந்தால்தான் வடநாட்டின் வளர்ச்சிக்காகத் தென்னாட்டின் நலன் பலியிடப்படுவது தெளிவாகப் புலனாகும்.

வடநாட்டின் தொழிலபிவிருத்திக்கு வெளிநாட்டினர் மூலதனம இன்றியமையாத் தேவையாகிறது. எனவே, அதற்காக மைசூர் அரசாங்கம் அப்பகுதியில் தொழில் நடத்திவரும் ஆங்கில துரைமார்களுக்கு அதிருப்தி ஏற்படாத வகையில் அள்ளிக் கொடுத்தாகவேண்டும் என இந்தியப் பேரரசு நியாயம் பேசுகிறது.

மைசூர் மக்கள் தொல்லைபட்டாலும், பணநட்டம் ஏற்பட்டாலும் தனக்கு அக்கரை இல்லை என இந்தியப் பேரரசு எண்ணி இருப்பதைத்தானே, இந்தியப் பேரரசின் போக்கு எடுத்துக் காட்டுகிறது? இதுதான் வடநாட்டு ஏகாதிபத்தியத்துடன் தென்னாடு இணைந்து இருப்பதின் மதிப்பு ஆகும்.

வர்த்தகத் தொடர்பு துண்டிக்கப்படுகிறது!

காரணம் பற்றி விளக்கம்

பாங்காக், அக். 16—

மக்கள் சீனாவிலிருந்து எந்தவித இறக்குமதியும் கூடாதென சயாம் பிரதம மந்திரி பிபுல் சங்க்ராம் உத்தரவிட்டிருக்கிறார் எனத் தெரிய வருகிறது.

சயாமில், ஆட்சியைக் கவிழ்ப்பதற்காக நடைபெறும் அழிவு வேலைகளுக்கு இந்த இறக்குமதியால் கிடைக்கும் பணம் உபயோகப்படுத்தப்படுவதாக சர்க்காருக்குத் தகவல் கிடைத்திருக்கிறதாம்; அதனாலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாம்!

ஆந்திராவில் வாழும் தமிழர்களுக்கு பாதுகாப்பு!

கோபால ரெட்டி உறுதி கூறுகிறார்

கர்னூல், அக். 16—

மாநிலத்தில் உள்ள எல்லா மொழிவழிச் சிறுபான்மையினருக்கும் முடிந்த எல்லா வசதிகளையும் ஆந்திர சர்க்கார் செய்து தரும் என்றும், அதேபோல சென்னை சர்க்காரும் அங்குள்ள தெலுங்கு மொழிச் சிறுபான்மையினருக்கு எல்லா வசதிகளையும் செய்து தருவர் என்று தான் நம்புவதாகவும், ஆந்திர சட்டசபையில், முதன்மந்திரி கோபாலரெட்டி கூறியிருக்கிறார். குறிப்பாகச் சித்தூர் மாவட்டத்திலுள்ள தமிழர்களுக்கு இந்த வசதிகள் செய்து தரப்படும் என்றும் அவர் கூறினாராம்.

இந்த விவகாரத்தில் சென்னை சர்க்கார் சரிவர நடந்துகொள்ளவில்லையானால், மாநிலப் புது அமைப்புக்குப் பிறகு அமையும் மண்டலக் குழுவிடம் ஆந்திர சர்க்கார் முறையிடும் என்றும், கோபால ரெட்டி கூறினாராம்.

ஐதராபாத் மந்திரி சபை

ஐதராபாத் மாநிலம்,மாநிலப்புது அமைப்பை ஒட்டித்துண்டாடப்படுவதால், மாநில மந்திரிசபை, சட்டசபை ஆகியவை அக். திங்கள் 31-ந் தேதியன்று கலைக்கப்பட்டுவிடும் என்று தெரியவருகிறது.

தண்டனைக் காலம் குறையுமாம்

புதிய ஆந்திர மாநிலம் அமைவதை ஒட்டி, நவம்பர் 1-ந்தேதியன்று ஆந்திரா—தெலிங்கானா பிரதேசக் கைதிகளின் தண்டனைக் காலம் குறைக்கப்படும் என்று தெரியவருகிறது.

ஆந்திர மாநிலத்தில் விசைத்தறிகள் நிலை

கர்னூல், அக் 16—

ஆந்திர மாநிலத்தில் தனிப்பட்டவர்கள் விசைத்தறிகள் வைத்து நடத்த அனுமதிக்கப்படுவார்களாம்; கூட்டுறவுச் சங்கங்கள்மூலம் விசைத்தறிகளை ஏற்படுத்தப்போவதில்லையாம்; ஆனால், இந்திய சர்க்கார் விருப்பப்படி கைத்தறிகளைப் பதிவு செய்வார்களாம்.

சென்னையிலுள்ள ஆந்திர சர்க்கார் அலுவலகங்கள்

கர்னூல், அக். 16—

சென்னையிலுள்ள எல்லா ஆந்திர அரசாங்க அலுவலகங்களும் 1957 ஜனவரிக்குள் கர்னூல் அல்லது குண்டூருக்கு மாற்றப்படுமாம்.

சென்னை சட்டசபை

அக். 23-ந் தேதி கூடுகிறது

மாநிலச் சீரமைப்பின் காரணமாக சென்னை சட்டசபையிலிருந்து விலகவிருக்கும் உறுப்பினர்களுக்கு பிரிவு உபசாரமளிப்பதற்காக இரு சபைகளின் கூட்டங்களும் அக். 23-ந் தேதி நடைபெறும்; சட்டசபை 11 மணிக்கும், மேல்சபை மாலை 3 மணிக்கும் கூடும். இக் கூட்டத்தில் சில மசோதாக்களும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படக்கூடும்.

கருப்புக்கட்டித் தொழிலை வளப்படுத்தத் திட்டம்

மத்திய ஆட்சியின் உதவி

புதுடில்லி, அக். 13—

நடப்பு ஆண்டில் பனை கருப்புக் கட்டி தொழில் வளர்ப்பதற்கான திட்டத்தை இந்திய அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

இந்தத் திட்டம் அகில இந்திய காதி—கிராமக் கைத்தொழில் ஏழு நிறைவேற்றும். பூனா, உடன்குடி, குன்னங்குளம், காசர்கோடு ஆகிய நான்கு இடங்களில் இதற்கான நிலையங்கள் அமைக்கப்படுமாம்.

இதற்காக ரூ. 19,02,300 மானியமாகவும், ரூ. 7,12,000 கடனாகவும் அளிக்கப்படுமாம்

இந்தத் திட்டப்படி 30 பயிற்சி நிலையங்கள் 10 பிரச்சார நிலையங்கள், 56 உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்படுமாம்.

மத மாற்றம்: அரசியல் நோக்கம் உடையதாம்

நாகபுரி, அக். 16—

"டாக்டர் அம்பேத்கார் புத்த நெறியைத் தழுவிக்கொண்டிருப்பது முழுக்க முழுக்க அரசியல் நோக்கம்கொண்ட செயலாகும்," என்று, மத்தியப் பிரதேச மாநில உதவி மந்திரியும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவருமான கணேஷ்ராம் ஆனந்த் என்பார் குறிப்பிட்டிருக்கிறாராம்.

"ஏற்கனவே செத்துக்கொண்டிருக்கிற தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்திற்கு இதுபோலக் கூட்டாக மதம் மாறுவதின் மூலம், புதிய இரத்தமளிக்க அவர் முயற்சிப்பதாகவே தோன்றுகிறது.

"இதுபோன்று கூட்டாக அவர்கள் மதம் மாறியிருப்பதால், தாழ்த்தப்பட்டவருக்கு என்று கிடைத்து வந்த சலுகைகள் இனி கிடைக்க மாட்டா.

"தாழ்த்தப்பட்டவர்கள், இந்தச் சலுகைகளை எல்லாம் அனுபவிக்கும் வாய்ப்பினை இழந்துவிட்டு, வீண் பிரமை வழி நடக்கப்போகின்றனரா?

"புத்தமதம் தாழ்த்தப்பட்டோருக்குப் பெருமை தேடித்தரும் என்று கொள்வதும் சந்தேகத்திற்குரியதேயாகும்," என்றெல்லாம் அந்த மந்திரி கூறினாராம்!

குறைந்த ஊதியம் பெறும் இரயில்வே ஊழியர்கள்

சம்பள உயர்வு பெறுவர்

மைசூர், அக். 16—

இரயில்வேயில் தற்போது குறைந்த ஊதியம் பெற்றுவரும் ஊழியர்களின் சம்பளத்தைத் திருத்தி அமைத்து உயர்த்தும் திட்டங்களைக் குறித்து இரயில்வே போர்டு அநேகமாக ஒரு முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. சம்பள உயர்வு குறித்து நவம்பரில் அறிவிக்கப்படுமாம்.

நம்பிக்கையில்லாப் பிரரேபனை தோல்வி

பம்பாய், அக் 16—

பம்பாய் சர்க்கார்மீது எதிர்க்கட்சியினர் கொண்டுவந்த நம்பிக்கையில்லாப் பிரரேபனையை, பம்பாய் சட்டசபை நிராகரித்துவிட்டது; பிரரேபனையை எதிர்த்து 234 பேர்களும் ஆதரித்து 33 பேர்களும் வாக்களித்தனர்.

தலையிடமாட்டார்கள்!

புதுடில்லி, அக். 16—

காங்கிரஸ் சட்டசபைக் கட்சித் தலைவர் தேர்தல்களில் மத்திய பார்லிமெண்டரி போர்டு தலையிடாது என்றும் கட்சி உறுப்பினர்களே தம் விருப்பப்படி தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும்படியும் காங்கிரஸ் தலைவர் தேபர் கூறியுள்ளாராம்.

மேற்கு வங்க கவர்னராக சரோஜினிமகள் நியமனம்?

ஐதராபாத், அக். 16—

சரோஜினி நாயுடுவின் மகள் மிஸ். பத்மஜா நாயுடு மேற்கு வங்க கவர்னராக நியமிக்கப்படக்கூடும் எனத் தெரியவருகிறது.

'ஜனநாயகம் தழைக்க உறுதியான எதிர்க் கட்சி வேண்டும்'

'மக்கள் தீவிர பங்குபெற வேண்டும்'

அட்லி கூறும் நல்லுரை

சென்னை, அக். 15—

'ஒரு நல்ல சர்க்கார் நீடிப்பதற்கு உறுதியானதோர் எதிர்க் கட்சி மிக அவசியமாகும்' என்ற கருத்தை, இங்கிலாந்து நாட்டின் பிரபலமான எதிர்க் கட்சித் தலைவர் அட்லி, சென்னையில், காமன் வெல்த் பார்லிமெண்டரி சங்கக் கூட்டத்தில் பேசும்போது வலியுறுத்தியிருக்கிறார்.

"வேறு எவரையும்விட நான் தான் அதிகமான காலமாக எதிர்க் கட்சித் தலைவராயிருந்திருக்கிறேன் என்று கருதுகிறேன்; எப்போதாவது இதர சட்ட மன்ற உறுப்பினர்கள் என்னிடம் யோசனை கேட்க வந்தால், நான் ஒன்றை அவர்களிடம் கேட்பது வழக்கம். 'நீங்கள் எதிர்க் கட்சியா? சர்க்கார் கட்சியா?' என்பதுதான் அது!

"அவர்கள் சர்க்கார்கட்சியானால், குறிப்பிட்ட சிலவற்றை அவர்களுக்குக் கூறுவேன்; அவர்கள் எதிர்க் கட்சியானால், சர்க்காரைக் கவலையிலாழ்த்து கிற இரண்டொரு விஷயங்களைச் சொல்லித் தருவேன்; இதெல்லாம், சர்க்கார் நன்கு நடைபெறுவதற்காகத்தான்,"

என்று அவர், பலத்த சிரிப்பிற்கிடையே குறிப்பிட்டிருக்கிறார்.

★

ஜனநாயகம் தழைக்க!

சென்னை நகரசபையில் வரவேற்புக்குப் பதிலளித்துப் பேசுகையில், அவர் ஜனநாயகம் பற்றிக் குறிப்பிட்டதாவது:—

"திட்டமிடுவது என்பது, சர்க்கார் தலைமையையும் நிபுணர்களையும் பொறுத்ததாகும். ஆனால், ஜனநாயகம் என்பது, மக்களைப் பொறுத்தது என்பதை நாம் மறந்துவிடலாகாது. மக்கள் தீவிரமான பங்கு பெற்றாலன்றி ஜனநாயகம், சிலரது எதேச்சாதிகாரம் என்ற நிலைக்குச் சுலபத்தில் சென்றுவிடக்கூடியதாகும்."

கே. வி. கே. சாமி படுகொலை வழக்கு

தங்கப்பழம் ஜாமீனில் விடுதலை

சென்னை, அக். 16—

அத்துக்குடித் தோழர் கே. வி. கே சாமி படுகொலை செய்யப்பட்டதை ஒட்டி கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான தங்கப்பழம், ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

இவருக்கு ஜாமீன் விடுதலை தர முடியாதென கீழ் நீதிமன்றங்கள் தீர்ப்பளித்திருந்தன. இந்த தீர்ப்புக்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் அப்பீல் செய்து, தங்கப்பழம் ஜாமீன் விடுதலை பெற்றிருக்கிறார்.

ஆயிரம் ரூபாய்க்கு சொந்த ஜாமீனும், இரண்டாயிரம் ரூபாய்க்கு நபர் ஜாமீனும் தர வேண்டும் என்றும், தங்கப்பழம் சென்னை நகரிலேயே பூர்வாங்க விசாரணை முடியும்வரை இருக்க வேண்டும் என்றும், வாரந்தோறும் சென்னை பிரதம மாகாண நீதிபதி முன்னிலையில் ஆஜராக வேண்டுமென்றும் உயர் நீதிமன்ற நீதிபதி ஏ. எஸ். பி. அய்யர் நிபந்தனை விதித்திருக்கிறார்.

துணிகளுக்கு நியாய விலை

புதுடில்லி, அக். 16—

எல்லாவிதமான துணிகளுக்கும் நியாய விலைகளைக் குறிப்பிட்டு விரைவிலேயே அரசாங்கம் அறிக்கையொன்று வெளியிடக்கூடுமாம்.

'மதம் மாறிய பின்னரும் சலுகைகளை அனுபவிப்போம்'

'உரிமைகளை விட்டுக் கொடோம்'

டாக்டர் அம்பேத்கார் கருத்து

நாகபுரி, அக். 15—

"புத்த மதத்தைத் தழுவிக் கொண்ட போதிலும், தாழ்த்தப்பட்டவர்களுக்கென அரசியல் சட்டத்தில் தரப்பட்டுள்ள எல்லா சலுகைகளையும் பெற நாங்கள் தகுதியுடையவர்களே! நாங்கள் தொடர்ந்து எங்களின் நியாயமான உரிமைகளுக்காகப் போராடுவோம்"

என்று பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் டாக்டர் அம்பேத்கார் குறிப்பிட்டிருக்கிறார்.

தொடர்ந்து அவர் குறிப்பிட்டதாவது:—

"இன்று அரசியல் சட்டத்தில் தாழ்த்தப்பட்டவர்களுக்கெனத் தரப்பட்டுள்ள சலுகைகள் எல்லாம் நான் பட்டபாட்டின் விளைவுகள்தான்; எனவே மதம் மாறிய பின்னும் அவை உங்களுக்குக் கிடைப்பதற்காக நான் பாடுபடுவேன்.

"மதம் மாறியதால், உங்களுக்குக் கிடைத்துவரும் சலுகைகளும் உரிமைகளும் கிடைக்காமற் போய்விடும் என்று கூறப்படுவது போக்கிரித்தனமான பிரச்சாரம் ஆகும். அறியாதவர்களைத் தொடர்ந்து இந்நிலையிலேயே இருக்கச் செய்வதற்கான பிரச்சாரமே அது."

வரவு-செலவு பிரச்சினைகளே பிரதான காரணம்

தனது இராஜிநாமா குறித்து கம்போடியப் பிரதமர்

நாம்பென் (கம்போடியா), அக். 15—

"நான் பதவியிலிருந்து விலகிக்கொள்வதற்குள்ள முக்கியமான காரணம், வரவு-செலவுத் திட்டப் பிரச்சினைகள்தான்.

"மேலும், எனது எதிரிகள் நான் ஏதோ மக்களுக்கு உதட்டளவில் மட்டுமே சேவை செய்வதாகவும், இதுவரை உருப்படியாக மக்களுக்கு எதுவும் செய்யவில்லை என்றும், குற்றம் சுமத்துகின்றனர் எனவேதான், நான் பிரதம மந்திரி பொறுப்பிலிருந்து விலகிக் கொள்கிறேன்"

என்று, கம்போடியா நாட்டுப் பிரதமர் இளவரசர் நரோதம் சிஹானக் கூறியிருக்கிறார்.

அவரது இராஜிநாமா ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டதாக கம்போடிய மன்னர் தெரிவித்திருப்பதாக வானொலி அறிவிப்புத் தரப்பட்டிருக்கிறது.

தனது இராஜிநாமாவுக்கான மேலும் காரணங்கள் என்று பிரதமர் கூறியிருப்பதாவது:—

"சிவில் சர்வீஸ் புனரமைப்பில் பல கஷ்டங்கள் எழுந்தன; இலஞ்சம் வாங்குவதாக அதிகாரிகள்மீது குற்றம் கூறப்படுகிறது; ஆனால் எவரும் சாட்சி கூற மறுக்கிறார்கள். என்னுடைய எதிரிகளும், என்னைப் பிடிக்காதவர்களும்தான், அதிகாரிகள் இலஞ்சம் வாங்குவதாக, மொட்டைக் கடிதங்களில் புகார் கூறுகின்றனர்; இவை, அதிகாரிகளைத் தண்டிக்கப் போதுமானவையல்ல,"

இளவரசர் சிஹானக், முன்பு இருமுறை பிரதமராக இருந்திருக்கிறார்.

புதிய மந்திரி சபையை அவர் கடந்த செப். 15-ந் தேதிதான் அமைத்தார்; அப்போதும் அதற்கு முன்பு டிசம்பர் திங்களிலும் அவர் தனது பிரதமர் பதவியை இராஜிநாமாச் செய்து, பின்பு மீண்டும் பொறுப்பேற்றுக் கொண்டிருந்தார்.

இவர், தனது தந்தைக்கு மன்னர் பதவியைத் தந்துவிட்டு, அந்தப் பதவியைத் துறந்தார்; மக்கள் சோஷலிஸ்டுக் கட்சியைத் துவக்கினார்.

கழகச் செய்திகள்

காவேரி நகர் தி. மு. கழக அமைப்பு

13—10—56 காலை 10 மணியளவில், காவேரிநகர் தி. மு. கழக ஆதரவாளர்களால், தோழர் தவபதி கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றக் கூட்டத்தில் கிளைக் கழகம் அமைக்கப்பட்டு நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: க. தங்கராசு; துணைச் செயலாளர்: சி.சிங்கமுத்து; பொருளாளர்: ஆ. கோவிந்தன்; மாவட்ட உறுப்பினர்: டி. கே கோவிந்தராசு. செயற்குழு உறுப்பினர்கள் 14 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் கே. வி. கே. சாமி மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகம்

21—9—56 மாலை 5 மணிக்கு, நாஞ்சில் மாவட்டத் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் வி. எம். ஜான், கே. சுப்பிரமணியம் இருவரும் பொதுக்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

போடிநாயக்கனூரில் திராவிட நாடு பிரிவினை நாள் விழா

29—9—56 மாலை, தியாகராயர் திடலில் தோழர் முகதா தலைமையில் மேற்படி விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது தோழர்கள் எம் எஸ். இராமசாமி, நெடுஞ்சேரலாதன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தேனீ தொகுதி தி. மு. க. அமைப்பு

10—10—56 மாலை 3 மணிக்கு தோழர் சோ. வெற்றி அரசு கிட்டங்கியில் தோழர் ச. ராசு தலைமையில் தேனி தொகுதி தி. மு கழக அமைப்புக்கூட்டம் நடைபெற்றது. கழக அமைப்பு, தேர்தல் சூழ்நிலை ஆகியவை குறித்து ஓடைப்பட்டி, வெள்ளையம்மான்புரம், சின்னமனூர் அம்மச்சிபாபுரம், ஆசாரிப்பட்டி, பாலக்கோம்பை, தெப்பம்பட்டி, வெங்கடாசலபுரம், அல்லிநகரம். குன்னூர், தேனி ஆகிய கிளைக் கழகப் பிரதிநிதிகள் கலந்து கொண்டு பேசினர். பின்னர் தொகுதிக் குழு நிர்வாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: பெ மூர்த்தி (அல்லி நகரம்); துணைச் செயலாளர்கள்: பாலமணி (கண்டமனூர்); என். இராமசாமி (வெங்கடாசலபுரம்), சின்ன காமராசா (ஓடைப்பட்டி), கா. சிவசாமிநாதன் (சின்னமனூர்), இராமையா (தெப்பம் பட்டி); பொருளாளர்: சோ. வெற்றிஅரசு (தேனி) கூட்டத்தில் சில முக்கிய முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

சேலம் 6-வது வட்ட தி. மு. கழக அமைப்பு

11—10—56 இரவு 8 மணிக்கு, தோழர் கே. ஏ. கண்ணன் கடையில், தோழர் கோ. இறைமணி தலைமையில் நடைபெற்ற 6-வது வட்டக் கழக அமைப்புக் கூட்டத்தில் கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: கோ. இறைமணி; துணைச் செயலாளர்: கே. மாணிக்கம்; பொருளாளர்: ஆர். முருகேசன். செயற்குழு உறுப்பினர்கள் 7 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஆறுபாதியில் தி. மு. கழக அமைப்பு

23—9—56 இரவு 9 மணிக்கு, ஆறுபாதி தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் என். கிட்டப்பா தலைமையில் நடைபெற்றது. கழக நிர்வாகிகளும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: மு.கோவிந்தசாமி; துணைச் செயலாளர்: கோ. திராவிடமணி; பொருளாளர்: அ. நல்லதம்பி; மாவட்டப் பிரதிநிதி: மா. இராமு. செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கம்பராஜபுரத்தில் தி. மு. கழகத் துவக்கம்

22—9—56 மாலை வாலாஜாபாத் அடுத்த கம்பராஜபுரத்தில் தோழர் சி வி. எம். அண்ணாமலை தலைமையில் துவக்க விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் டி. கே. தாமரைச்செல்வன், டி. சீனிவாசன், வி. சண்முகம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

விச்சந்தாங்கலில் தி. மு. கழகத் துவக்கம்

24—9—56 இரவு 8 மணிக்கு காஞ்சிபுரத்தை அடுத்த மேற்படியூரில் தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில் கிளைக் கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர்கள் வி. சண்முகம், டி. என். சம்பந்தம் சொற்பொழிவாற்றினர்.

ஆலத்துடையான்பட்டி தி. மு. கழகத் துவக்கம்

8—10—56ல், தோழர் அ. கலியபெருமாள் தலைமையில் மேற்படியூரில் கழகத் துவக்க விழா நடைபெற்றது. தோழர் மு பெ. முத்துக்கருப்பன் கொடியேற்றி வைத்தார். தோழர்கள் சி. பி. சிற்றரசு, எம். எஸ். மணி, ஆதிமூலம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சென்னை—சென்ட்ரல் இரயில் நிலையம்

ரூ. 2 கோடி செலவில் திருத்தியமைக்கப்படும்

சென்னை, அக். 15—

சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்தைப் புதுப்பிக்கும் வேலை, 1957-ம் ஆண்டுத் துவக்கத்தில் மேற்கொள்ளப்படும்.

நிலையத்தைத் திருத்தியமைப்பதற்காக. ரூ 207 செலவிட ஒரு திட்டம் தீட்டப்பட்டிருப்பது பற்றி முன்பே செய்தி வந்தது.

இரண்டாம் திட்ட காலத்தில் இந்த இரயில் நிலையத்தில் எல்லாப் போக்கு-வரத்துகளும் அதிகரிக்கும் என்ற காரணத்தினால்தான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகின்றதாம்.

திட்டக்குடியில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன்

ஊராண்மைக் கழக வரவேற்பு — பொதுக்கூட்டம்

4—10—56 அன்று பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் திட்டக்குடிக்கு வருகை தந்தார். அவருக்கு ஊராட்சி மன்றத்தின் சார்பில் வரவேற்பளிக்கப்பட்டு, வரவேற்பு இதழும் வாசித்தளிக்கப்பட்டது. அன்று மாலை திட்டக்குடி ரேடியோ மைதானத்திலிருந்து தோழர் ஏ. கோவிந்தசாமி தலைமையில் ஊர்வலம் புறப்பட்டுப் பல இடங்களில் கழகக் கொடிகள் ஏற்றிவைக்கப்பட்டன. திரு. வி. க. திடலை ஊர்வலம் அடைந்ததும் தோழர் மு. வேலன் தலைமையில் பொதுக்கூட்டம் ஆரம்பமானது. தோழர்கள் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., தொ பிச்சமுத்து ஆகியோர் சிறிது நேரம் பேசினபின் பொதுச்செயலாளர் அவர்கள் அரியதோர் உரை நிகழ்த்தினார். பொதுச்செயலாளர் அவர்களுக்குப் பல கிளைகள் சார்பில் மாலைகளும் கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பட்டன. இறுதியில் முக்கிய முடிவுகள் சில மேற்கொள்ளப்பட்டன.

நரசிங்கபுரத்தில் கழகப் பொதுக்கூட்டம்

28—9—56ல் திருவள்ளூர் தாலுகா, நரசிங்கபுரத்தில் பஞ்சாயத்துப் போர்டு துணைத் தலைவர் திரு. சாந்தி தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் சி. வி. எம் அண்ணாமலை, டி என். சம்பந்தம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்

பரந்தூரில் கழகப் பொதுக்கூட்டம்

19—9—56 இரவு 7 மணிக்கு, தோழர் டி. என். சம்பந்தம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் மு. கருணாநிதி, டி. வி. நாராயணசாமி, சி.வி. எம். அண்ணாமலை, டி. சீனுவாசன், எம் இராசபாதர் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வாகனேரி (திருச்சி) தி. மு. கழகம்

28—9—56 இரவு 9 மணிக்கு, கிளைக் கழகத்தில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர், மாவட்ட உறுப்பினர்: வி. கே. எம். சாமி; துணைச்செயலாளர்: எம். ஏ. சர்புதீன்; பொருளாளர்: என். முருகேசன். செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சங்கரநயினார்கோவில் தி. மு. கழகம்

7—10—56 மாலை 3 மணிக்கு, தோழர் ஆர். சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற நகரக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், 25-4-56 முதல் 19-9-56 வரை புள்ள கழக வரவு - செலவுகள் ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், மற்றும் ஒரு முடிவும் மேற்கொள்ளப்பட்டது.

நிலக்கோட்டை தி. மு. க.

7—10—56 மாலை 5 மணிக்கு, தோழர் மு கருணாகரன் தலைமையில் கிளைக் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: மு. கருணாகரன்; துணைச் செயலாளர்: வ. பாஸ்கரன்; பொருளாளர்: ஓ ச. மு. ச. நடராசன்; விளம்பர உறுப்பினர்கள்: இராசாப்பழம், பெ இராமசாமி; மாவட்டப் பிரதிநிதிகள்: மு. கருணாகரன், வே. செயராசன் மற்றும் செயற்குழு உறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தமிழகத்தில் பெரும்வெள்ளம்

காவிரி, பாலாறு கரைபுரண்டோடுகிறது

சென்னை, அக். 18—

சென்ற வாரம் தமிழகத்தில் பெய்த மழையின் காரணமாகத் தமிழ் நாட்டில் காவிரி, பாலாறு ஆகியவற்றில் வெள்ளம் ஏற்பட்டு தண்ணீர் கரைபுரண்டு ஓடுகிறது. தஞ்சை, வட ஆர்க்காடு மாவட்டங்களில் மக்களுக்கு வேதனையும், பயிர்களுக்கு நாசமும் உண்டாகியிருக்கிறது.

வேலூர் அருகே ஏரியில் உடைப்பு ஏற்பட்டு தண்ணீர் பொங்கி வருகிறது; மணல் மூட்டைகளைப் போட்டு உடைப்பை அடைத்துவருவதாகத் தெரிகிறது.

தஞ்சை மாவட்டம் மதுக்கூரில் வெள்ளம் ஏற்பட்டு 3,000 ஏகர் நிலம் வெள்ளக்காடாக உள்ளது.

மேட்டூர் அணையில் 120 அடி உயரத்திற்கு மேல் தண்ணீர் பொங்கி வழிகிறது.

சீர்காழியில் கொள்ளிடம் ஆற்றில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தினுல் குடிசைவாசிகள் வாழஇடமின்றித் தவிக்கின்றனர்; காய்கறித் தோட்டங்கள் பாழாகிவிட்டனவாம்.

திருவாரூர் வட்டாரத்தில் கண்ணன் ஆற்றில் உடைப்பு ஏற்பட்டுள்ளது; விளைச்சல் பாழாகிவிட்டது.

திருச்சி மாவட்டத்தில் அடுத்த இரண்டு நாட்களில் மக்களுக்கு ஆபத்து ஏற்படும் நிலை ஏற்படக் கூடுமாம்.

வேலூரில் உள்ள ஏரியில் உடைப்பு ஏற்பட்டுள்ளது; பாலாற்றின் வெள்ளத்தினுல் சென்னை—காஞ்சீபுரம், ஆரணி பிரயாணிகள் பஸ்கள் ஓடவில்லை.

சேலம் மாவட்டத்தில் பெண்ணையாற்றிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. சேலம்—பெங்களூர் பாதை அடைக்கப்பட்டுள்ளது.

வட ஆர்க்காடு மாவட்டத்தில் போளூர், செஞ்சி, வந்தவாசி, ஆர்க்காடு, ஆரணி, காஞ்சீபுரம், மூலக்காடு ஆகிய இடங்களுக்குப் பஸ்கள் செல்வது தடைப்பட்டுள்ளது.

செய்யாற்றில் 13 ஆண்டுகளுக்குப் பிறகு வெள்ளம் ஏற்பட்டுள்ளது. கால்நடைகள் தண்ணீரில் மிதந்து செல்கின்றனவாம். எங்கும் ஏழை குடிமக்களுக்கு இருக்க இடமின்றி தவிக்கவேண்டிய நிலைமையும், விளைச்சல் பயிர்களுக்குப் பெருத்த நாசமும் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தமிழ் நாடு முழுவதும் இந்த வெள்ளத்தின் வேதனை வளர்ந்து வருகிறது.

வடநாட்டில் வெள்ளம்

யமுனை அடங்கியது; கங்கையில் அளவுக்குமேல் உயர்ந்தது

பட்டேனா, அக். 16—

வடஇந்தியாவில் யமுனை நதியில் ஏற்பட்ட வெள்ளத்தைத் தலைவர் இராசேந்திர பிரசாத், பண்டித நேரு ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு, அங்குள்ள மக்களின் துயரத்தைத் தீர்ப்பதற்குப் பாடுபட்டனர்; வெள்ளத் தடுப்பு வேலையில் இந்திய இராணுவம் ஈடுபட்டு நற்பணியாற்றியதற்கு பண்டித நேரு செய்தி மூலம் பாராட்டியுள்ளார்.

யமுனை அடங்கியதும், கங்கை நதியில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது என்று செய்தி கிடைத்துள்ளது. தண்ணீர் மட்டம், அதன் அளவுக்குமேல் $1\frac{1}{2}$ அடி உயர்ந்திருப்பதாகவும், அந்தப் பகுதியிலுள்ள 144 கிராமங்களில் குடியிருக்கும் 80,000 கிராமவாசிகள் பாதிக்கப்படுவார்கள் என்றும் தெரிகிறது. உத்திரப் பிரதேசத்தில் ஆயிரக்கணக்கான கிராமங்கள் வெள்ளக் காடாகியுள்ளதாம்.

எல்லைக் கிளர்ச்சிகள் தொடர்ந்து நடக்கும்

தமிழரசு கழகச் செயற்குழு முடிவுகள்

சென்னை, அக். 17—

எல்லைப் போராட்டத்தைத் தீவிரமாக நடத்துவதற்கான வழிகளை வகுக்க இன்று தமிழரசு கழகச் செயற்குழு, ம. பொ. சிவஞானம் தலைமையில் கூடி கீழ்க்கண்ட முடிவுகளைச் செய்தது.

தமிழக வடஎல்லைக்காக எல்லைக் கமிஷன் நிறுவ வேண்டுமென்ற கோரிக்கையை அரசாங்கம் நிறைவேற்றும்வரையில் தொடர்ந்து, துவங்கியுள்ள போராட்டத்தை நடத்துவது.

அவ்வப்போது நிலைமைக்கு ஏற்றவாறு திட்டங்களை மாற்றியமைக்க கழகத் தலைவருக்கு குழு அதிகாரம் அளித்தது.

சங்கரலிங்கம் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டதுடன், சென்னை அரசாங்கத்தின் அலட்சியப் போக்குக்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

வட எல்லைக் கிளர்ச்சி

சென்னையில் 15 பேர் கைது

சென்னை, அக். 18—

சென்னை தலைமைத் தபால் நிலையத்தின்முன் இன்று தமிழரசுக் கழகம், எல்லைக் கமிஷன் கோரி மறியல் நடத்தியது.

இன்றும், மறியல் செய்த 15 தொண்டர்களையும் போலீஸ் கைது செய்தது.

திண்டுக்கல்லில் தேர்தல் ஆய்வுக் குழுவினர்

கழகத் தோழர்களிடையே என்றுங் காணாத உணர்ச்சி

பொதுமக்களின் பேரார்வம்

தேர்தல் ஆய்வுக் குழுவினரான தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகியோர் தங்களின் பிரயாணத் திட்டப்படி 17-10-56 காலை 10-மணிக்கு திண்டுக்கல் வந்துசேர்ந்தனர்.

ஆய்வுக் குழுவின் அலுவலகமாக அமைக்கப்பட்டிருந்த பாலு சத்திரத்தில், மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். முத்து, நகரச் செயலாளர் சுப்பையா, மற்றும் கழகப் பிரமுகர்கள் ஆய்வுக்குழுவினரை மலர் மாலைகள் அணிவித்து வரவேற்றனர்; ஏராளமான கழகப் பிரதிநிதிகளும் பொதுமக்களும் கூடியிருந்தனர்.

10-30 மணிக்கு ஆய்வுக்குழு தனது பணியினைத் துவங்கிற்று. பொதுச்செயலாளர் அவர்கள் ஆய்வுக்குழுவின் பணியினையும், கழகப் பிரதிநிதிகள் தரவேண்டிய விளக்கங்களைப் பற்றியும் எடுத்துக்கூறினர்.

பழனித் தொகுதி, பாளையம் தொகுதி, ஆத்தூர் தொகுதி, ஒட்டன்சத்திரம் தொகுதி, திண்டுக்கல் தொகுதி ஆகியவைகளிலிருந்து வந்திருந்த கிளைக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் கழக ஆதரவாளர்கள், பிரமுகர்கள் ஆகியோர் தொகுதிவாரியாக ஆய்வுக் குழுவின் முன் தங்களின் கருத்துக்களை தனித்தனியாகவும், ஒத்த கருத்துடையவர்கள் சேர்ந்தும் வந்து சாட்சியம் அளித்தனர்.

ஆய்வுக் குழுவினர் கேட்ட கேள்விகளுக்கும் தக்க விளக்கம் தந்தனர். விசாரணை பிற்பகல் 2-30 - மணிக்கு முடிவுற்றது.

மாலை 4 மணிக்கு ஆய்வுக் குழுவினர் மதுரை மாவட்டச் செயலாளருடன் பெரியகுளம் புறப்பட்டுச் சென்றனர். நகரச் செயலாளரும், தோழர்கள் சமதர்மம், மச்சகேந்திரன், மற்றும் உள்ளூர் தோழர்களும் பொதுமக்களும் வாழ்த்துக் கூறி வழி அனுப்பினர்.

இந்தி பற்றி மீண்டும் பண்டிதர்!

புதுடில்லி, அக். 17—

"இந்தியைத் தேசிய மொழியாக வளர்க்கும்போது, இதர பிரதேச மொழிகளை நாம் அலட்சியப்படுத்திவிடக்கூடாது; எந்த ஒரு மொழியும் இதரவற்றைப் புறக்கணிப்பதால் வளரமுடியாது,"

என்று பண்டித நேரு, ஒரு இந்திப் பிரச்சார மாநாட்டிற்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் கூறியிருப்பதாவது:—

'இந்தி, இந்தியாவின் தேசிய மொழியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது; இப்போது மாநிலங்களுக்கிடையில் நடைபெறும் காரியங்கள் ஆங்கிலத்தில்தான் நடைபெறுகின்றன; சில ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தியிலேயே அவை நடைபெறவேண்டும் என்று அரசியல் சட்டத்திலும் விதிக்கப்பட்டிருக்கிறது; இது ஒரு சரியான நடவடிக்கைதான். ஆனால் அதே நேரத்தில், அரசியல் சட்டத்தின் இறுதியில் கூறப்பட்டுள்ள 14 மொழிகளும் நமது தேசிய மொழிகள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது; நாம் அவற்றை எல்லாம் கூட்டுறவு நோக்கோடு, வளர்ச்சியுறச் செய்வதற்குப் பாடுபட வேண்டும்.

"மேலும் உலகத்தோடு நமக்குள்ள தொடர்புகள் நாளுக்கு நாள் வளர்ந்துவருவதையும் நாம் மறந்துவிடக்கூடாது; எனவே, உலகின் இதர பிரதான மொழிகளையும் நாம் கற்றுக்கொண்டாக வேண்டும்."

மாற்றப்பட்டனராம்!

புதிய மாநில அமைப்பின் கீழ் சென்னை நகரிலுள்ள 300 அரசாங்க ஊழியர்கள் புதிய கேரள அரசாங்கத்தில் சேவை செய்ய மாற்றப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

உணவுப்பொருள் விலை ஏற்றத்தைத் தடுக்க டில்லியின் மகத்தான நடவடிக்கை

புதுடில்லி, அக். 17—

உணவுப் பொருள்களின் விலை ஏற்றத்தைத் தடுத்து, நியாயமான விலையில் அவை கிடைப்பதற்கும், தாராளமாக உணவுப் பொருள்கள் எல்லாப் பகுதிகளிலும் கிடைக்கச் செய்வதற்குமாக டில்லிப் பேரரசு ஒரு 'மகத்தான' நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறது!

இப்போதுள்ள மந்திரி சபையை விரிவு படுத்துவதுதான் அந்தச் சீரிய நடவடிக்கை!

உணவு, மற்றும் விவசாயத் துறைகள் ஒரே இலாகாவாக இதுகாறும் பாவிக்கப்பட்டு வந்திருக்கின்றன; இனி 'உணவு இலாகா' என்றும் 'விவசாய இலாகா' என்றும் பிரிக்கப்பட்டு தனித்தனியாக இயங்குமாம்.

'இரண்டாம் திட்ட முதலீடுகளும், அவற்றின் பலன்களும் அதிகரித்திருப்பதை ஒட்டி, உணவு மற்றும் இதர அத்தியாவசியப் பண்டங்களின் தேவையும் அதிகரிக்கக்கூடும்; இந்த நிலையைச் சமாளிக்கவும், உணவுப்பொருள்களின் விலைகள் ஏறுமல் தடுக்கவும்தான் உணவு இலாகாவை விரிவுபடுத்தவும், ஒரு செயலாளரின் முழுநேரப் பொறுப்பில் அதனை கண்காணிக்கவுமான அவசியம் ஏற்பட்டது,' என்று மந்திரிசபை அலுவலகம் தகவல் தந்திருக்கிறதாம்.

சட்டசபைமுன் பீடித் தொழிலாளர் போராட்டம்

அக். 23-ந் தேதி நடைபெறும்

சென்னை, அக். 18—

சென்னை அரசாங்கம் கடந்த மூன்று ஆண்டுகளாகப் பீடித் தொழிலுக்குச் சட்டம் கொண்டு வருவதாகக்கூறி காலம் கடத்தி வந்திருக்கிறது; தொழிலாளர்கள் சார்பில் அமைச்சரிடம் தரப்பட்ட கோரிக்கைகளும் கவனிக்கப்படவில்லை; எனவே, சென்னை சட்டசபைக் கூட்டம் அக். 23-ந்தேதி நடைபெறும்போது, பீடித்தொழிலாளர்கள் சட்டசபைமுன் மறியல் நடத்துவது என்று முடிவு செய்துள்ளனர்.

சென்னை ஐக்கிய பீடித் தொழிலாளர்கள் சங்கத்தின் நிர்வாகக் கூட்டத்தில் இந்த முடிவு செய்யப்பட்டது.

சென்னைக்குக் கைத்தறிப் பட்டறை

புதுடில்லி, அக் 16—

கைத்தறிகளும், தறிச் சாமான்களும் தயாரிக்க ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு சென்னை மாநில அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கம் ரூ. $14\frac{1}{2}$ இலட்சம் கடனுதவி செய்துள்ளதாகத் தெரியவருகிறது.

சென்னை நகருக்கு அருகில் இந்தத் தொழிற்சாலை நிறுவப்படுமாம்.

தறி ஒன்றுக்கு ரூ 200 வீதம் கடனாக அளிக்க இருந்த நிதி உதவித் திட்டத்தைத் தறி ஒன்றுக்கு ரூ. 300 ஆக மாற்றி உயர்த்தப்பட்டுள்ளதாம்.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை திருவல்லிக்கேணி

41-வது வட்ட தி. மு கழக முதலாண்டு நிறைவு விழா

வெங்கடரங்கம் பிள்ளைத் தெரு (பஸ் ஸ்டாண்ட் அருகில்)

20—10—56 மாலை 6 மணிக்கு

தலைவர் : என். சீவரத்தினம்

பேசுவோர் :

அண்ணு

அலமேலு-அப்பாதுரை

இசை : நாகூர் ஆனிபா

[குறிப்பு : அன்று காலை கழகப் பணிமனையில் ஏழைகளுக்கு உணவளிக்கப்படும். பொதுக்கூட்டத்தில் தேர்தல் நிதி வழங்கப்படும்.]

★

துறையூர் :

பிள்ளையார் கோவில் அருகில்

20-10-56 மாலை 5-30 மணிக்கு

தலைவர் : ந. பாலு

பேசுபவர் : கண்ணதாசன்

பூதிப்புரம் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம்

20—10—56 இரவு 8—மணிக்கு, தோழர் இராம. இராசன் தலைமையில் கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். கடந்த பொதுக்கூட்ட வரவு-செலவு, மற்றும் பல பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

கொழும்பு அண்ணு பகுத்தறிவு மன்ற ஆண்டு விழா

21—10—56 பிற்பகல் 2-30 மணி முதல் கொழும்பு வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மண்டபத்தில் அமைக்கப்பெறும் திரு. வி. க. அரங்கில், அண்ணு பகுத்தறிவு மன்ற இரண்டாவது ஆண்டு நிறைவு விழா தோழர் க. சு. தமிழ்நாதன் தலைமையில் நடைபெறும்.

மாலை 3-15 முதல் 4-30 வரை தோழர்கள் பலர் பல தலைப்புகளில் சொற்பொழிவாற்றுவர். மாலை 5 மணிக்கு க. மகாலிங்கம் குழுவினரின் இசையரங்கும், மாலை 5-45 மணிக்கு திரு. சைலாயப்பிள்ளை அவர்களின் கலைத் தொண்டினைப் பாராட்டி தோழர் இரா. அதி. மணி அவர்களால் பொன்னுடை போர்த்து விழாவும் நடைபெறும். மாலை 6-15 மணி முதல் 8-45 வரை, தோழர்கள் பலர் பல தலைப்புகளில் பேசுவர். அண்ணு அவர்களின் உருவப் படத்தைத் தோழர் செ. இராசதுரை எம். பி. (ஆசிரியர் 'தமிழகம்') திறந்து வைப்பார். இரவு 9-30 மணிக்கு நடன நிகழ்ச்சிகள் நடைபெறும்.

★★★★★-★★★★★★★-★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தேர்தல் ஆய்வுக் குழுச் சுற்றுப்பயணம்

★

அக்.	ஊர்	நேரம்	தங்கும் இடங்கள்
21 :	காரைக்குடி	மாலை 6 ,,	'இயூமன் காட்டேஜ்'—Human Cottage 5. முத்துப்பட்டிணம் 4-வது தெரு
22 :	பட்டுக்கோட்டை	காலை 9 ,,	காசாங்குளம் வடகரை சத்திரம் ஓய்வுவிடுதி
,,	தஞ்சை	பிற்பகல் 3 ,,	கீழவாசல். கோண்டிராசபாளையத் தண்ணீர்ப் பந்தல் கட்டிடம்
,,	மாயவரம்	மாலை 6 ,,	முனிசிபல் ஓய்வு விடுதி (மாயூரம் சந்திப்பு அருகில்)
23 :	கடலூர் N. T.	காலை 9 ,,	முசாபரி பங்களா

23—10—56 அன்று இரவு சென்னை வந்து சேருவார்கள்

'அறிவகம்' சென்னை 23—9—56

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

★★★★★★★★★★★★★★★★★★★★-★★★★★★★★★★★★★★★★★★★★-★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.